10/=

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli


குரல் 02 | அதிர்வு 12 | சனிக்கிழமை 12 மே 2018 | ethirolimedia@gmail.com | 021 224 38 18

## அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், மே 12

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைமையில் பேரெழுச்சியுடன் நடத்துவது குறித்து கலந்துரையாடும் கூட்டம் நேற்றையதினம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் அனுமதி மறுத்துள்ளது.

இதனையடுத்து பல்கலைக்கழகத்துக்கு அருகிலுள்ள விருந்தினர் விடுதியொன்றில் மேற்படி கலந்துரையாடலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் 06 ▶



# முள்ளிவாய்க்கால் முரணைத் தீர்க்க முதலமைச்சர்—மாணவர்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம், மே 12

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலினை முன்னெடுப்பது தொடர்பான மக்களது உணர்வுகளுக்கு மதிப்பளித்து கூட்டாக முன்னெடுக்க யாழ்.பல்கலைக்கழக மாணவ சமூகம் முன்வந்துள்ளது. அத்துடன் இது தொடர்பில் சந்திப்பொன்றை நடத்த அவர்கள் பகிரங்கமாக ஊடககங்களின் ஊடாக முன்வைத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு இன்று சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு அவர்களை சந்திக்க முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முன்வந்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடலை நேற்றையதினம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதும், அதற்கான அனுமதி பல்கலைக்கழக நிர்வாகத்தால் மறுக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து திருநெல்வேலியிலுள்ள விருந்தினர் விடுதியில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

நேற்று இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களின் மாணவ பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

கலந்துரையாடலின் பின்னராக ஊடகங்களிடையே மாணவ பிரதிநிதிகள் பேசியிருந்தனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலினை முன்னெ 06 ▶

## மகிந்தவின் சாவு எப்போது அறியத் துடிக்கும் அரசியல்வாதி



கொழும்பு, மே 12

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஜாதகத்துக்கு அமைய அவர் எவ்வளவு காலம் உயிர் வாழ்வார், அவருக்கு மரணம் ஏற்படக் கூடிய கிரக தோஷம் இருக்கின்றதா என பிரபல அரசியல்வாதி ஒருவர் தேடி பார்த்துள்ளதாக தெரிவிக் 06 ▶

## ஈரான் செல்கிறார் ஜனாதிபதி



கொழும்பு, மே 12

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இன்றையதினம் ஈரான் செல்லவுள்ளார்.

ஈரான் ஜனாதிபதி ஹஸன் ரவ்ஹானியின் 06 ▶

## யாழ்.பல்கலை மாணவரை அச்சுறுத்த அவசியம் இல்லை

யாழ்ப்பாணம், மே 12

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் தொடர்பில் யாழ் பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தை அச்சுறுத்த வேண்டிய அவசியம் வட மாகாண சபைக்கு இல்லை என வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய இனத்தினுடைய ஆயுதப் போராட்டம், 22 க்கும்



மேற்பட்ட நாடுகளின் உதவியுடன் மிகக்கொடூரமாக அழித்தொழிக்கப்பட்ட போது ஒரு இலட்சத்துக்கும் 06 ▶

## போர்க்குற்ற விசாரணைக்கு நான் எதிராளி அல்ல!

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, மே 12

யுத்த குற்றவிசாரணைகளுக்கு நான் எதிரானவன் இல்லை என தெரிவித்துள்ள இராணுவ தளபதி மகேஸ் சேனநாயக்க தன்மீது சுமத்தப்பட்டுள்ள களங்கத்தை போக்குவதற்கு இராணுவம் ஆர்வமாக உள்ளதுஎனவும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் வெளிநாட்டு



செய்தியாளர்களை சந்தித்தவேளை அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு வெளியே இராணுவத்துக்கு உரிய 06 ▶

## மன்னிப்பு கோரியது உண்மையே



கொழும்பு, மே 12

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மன்னிப்புக் 06 ▶

## மன்னிப்புக்கு மறுப்பு



கொழும்பு, மே 12

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் தாம் மன்னிப்புக் கோரவில்லை என்று, அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித் 06 ▶

## தமிழர்களே இணையுங்கள் இராணுவம் அழைப்பு



யாழ்ப்பாணம், மே 12

"தமிழ் இளைஞர்களும் இராணுவத்தில் இணைந்து கொள்ளலாம். இராணுவத்தில் பாதுகாப்பு உத்தியோகத்தர் என்ற பதவியைப் பெறும் வாய்ப்பும் 06 ▶

## பஸ் கட்டணங்கள்

### அதிகரிக்காது

கொழும்பு, மே 12

பஸ் கட்டணங்களை அதிகரிப்பது குறித்து எதுவித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் எம்.ஏ.பி. ஹேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

அதே வேளை எரிபொருள் விலையேற்றத்தைத் தொடர்ந்து 06 ▶

### அதிகரிக்கும்

கொழும்பு, மே 12

அரசாங்கம் எரிபொருளின் விலையை அதிகரிக்க மேற்கொண்ட நடவடிக்கைளை தொடர்ந்து, பஸ் கட்டணத்தை 10வீதம் அதிகரிக்க இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் நேற்று தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, மிக குறைந்த 06 ▶

## இளஞ்செழியனுக்கு இடமாற்றம்



கொழும்பு, மே 12

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உட்பட, மேல் நீதிமன்ற நீதிபதிகளான பாலேந்திரன் 06 ▶

# 48 மருந்துகளின் விலை குறைப்பு

கொழும்பு, மே 12

48 அத்தியவசியமான மருந்துகளுக்கு விலை குறைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.


பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சர்வதேச தாதியர் தின வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

"அடுத்த இரு வாரங்களில் இன்னும் சில மருந்துகளின் விலைகளைக் குறைக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. அரசாங்கத்தால் நோயாளிகளுக்கு அதிகபட்ச நன்மைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நாட்டில் இலவச சுகாதார சேவை மேலும் விரிவுபடுத்தப்படும்." என்றும் அவர் தெரிவித்தார்.

தெற்காசியா மாத்திரமன்றி உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் சுகாதாரம் நல்ல நிலையில் உள்ளது என்று உலக சுகாதார அமைப்பு (WHO) தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# பௌசி பதவியேற்பு





கொழும்பு, மே 12

தேசிய சகவாழ்வு மற்றும் நல்லிணக்க இராஜாங்க அமைச்சராக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எ.எச்.எம்.பௌசி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் பதவியேற்றார்.

இந்த நிகழ்வு தேசிய சகவாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் அரச தொழில் முயற்சிகள் மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல, நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் கலந்துகொண்டனர்.(ஆ)

# நீதிபதிகள் அதிகரிப்பில் மைத்திரி இழுத்தடிப்பு

## சொல்கிறார் அஜித் பெரேரா



கொழும்பு, மே 12

மேல்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்ட போதிலும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போதியளவு நீதிபதிகளை நியமிக்கும் விடயத்தில் இழுத்தடிப்பு செய்கின்றார் என்று அமைச்சர் அஜித் பெரேரா குற்றஞ்சாட்டி உள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

"வழக்குகள் தாமதிக்கப்படுவதாகவும், குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதில்லை என்றும் அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன.

நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள் தாமதிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்கு, மேலதிக உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமித்து, ஜனாதிபதி தனது கடமையை நிறைவேற்ற வேண்டும். நீதி தாமதிக்கப்பட்டால் தவறு செய்தவர்களுக்கே நன்மை கிடைக்கும். உயர் நீதிமன்றங்களில் சராசரியாக ஒரு வழக்கு முடிவதற்கு, 17 ஆண்டுகள் எடுக்கின்றன. குறைந்த பட்சம் 10 ஆண்டுகளும், அதிக பட்சம் 25 ஆண்டுகளும் எடுக்கிறன. வழக்குகளை விசாரிக்கப் போதிய நீதிபதிகள் இல்லாமையே இந்த இழுபறிக்கு முக்கிய காரணம் ஆகும். இப்போது மேல்நீதிமன்றங்களில் 75 நீதிபதிகள் தான் உள்ளனர். இதனால், நாங்கள், நீதிபதிகளின் எண்ணிக்கையை 110 ஆக அதிகரிக்க வழி செய்யும் வகையில் ஐந்து மாதங்களுக்கு முன்னர் சட்டங்களை நிறைவேற்றினோம். தற்போது நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதி கொண்டிருக்கிறார்.

வழக்குகள் தாமதிக்கப்படுவதற்கு இன்னொரு காரணம் சட்டமா அதிபர் திணைக்களம் ஆகும். சட்டமா அதிபர் திணைக்களத்தில் போதிய சட்டவாளர்கள் இல்லை. 17 ஆயிரம் வழக்குகள் உள்ள நிலையில் சட்டமா அதிபர் திணைக்களத்தில் வெறுமனே 113 சட்டவாளர்கள் தான் உள்ளனர்.

ஊதியம் குறைவாக இருப்பதால் சட்டவாளர்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்து கொள்வதற்கு தயங்குகிறார்கள். தனிப்பட்ட முறையில் அவர்கள் வழக்குகளில் வாதாடினால் கூடுதல் நிதியை உழைக்க முடியும். எனவே, நாங்கள், சட்டமா அதிபர் திணைக்களத்தில் சட்டவாளர்களின் எண்ணிக்கையை 213 ஆக அதிகரிப்பதற்கும், அரச சட்டவாளர்களுக்கான ஊதியத்தை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தோம். ஆனால், நான்கு மாதங்களாகியும் இன்னமும் எவரும் ஆட்சேர்ப்புச் செய்யப்படவில்லை.

நாட்டில் போதியளவு மேல் நீதிமன்றங்கள் இல்லை. நீதித்துறை திருத்தச்சட்டத்தில் சபாநாயகர் கையெழுத்திட்டதும், சிறப்பு தீர்ப்பாய மேல் நீதிமன்றங்களை அமைக்கும் அரசிதழை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும். மேல் மாகாணத்தில் குறைந்தது மூன்று மேல் நீதிமன்றங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும். ஏனைய மாகாணங்களில் மேலும் 10 மேல் நீதிமன்றங்கள் அமைக்கப்படும். சிறுவர்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்கத் தனியான சிறப்பு மேல் நீதிமன்றம் ஒன்றும் அமைக்கப்படும். இதற்காக ஜனாதிபதி, சட்டமா அதிபர் திணைக்களம், நீதியமைச்சர் ஆகியோர் தமது பணிகளை துரிதமாகச் செய்ய வேண்டும்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# காணாமற் போனோர் சந்திப்பு: மன்னாரில் இன்று ஆரம்பம்!

கொழும்பு, மே 12

காணாமற் போனோர் அலுவலகத்தின் ஆரம்பக் கட்டச் செயற்பாடுகள் இன்று மன்னாரில் ஆரம்பமாக உள்ளன. இதன் போது, காணாமற் போனோரின் உறவுகளைச் சந்திப்பதுடன், இந்த அலுவலகம் பற்றி விளக்கமளிக்கப்பட உள்ளது என்று அலுவலகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

காணாமல் போனோர் அலுவலகத்தின் பிராந்திய மட்ட செயற்பாடுகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

"காணாமல் ஆக்கப்பட்டோரின் விபரங்களைச் சேகரிக்கும் கூட்டமாக இது அமையாது. எதிர்காலத்தில் முன்னெடுக்க உள்ள திட்டங்கள் மற்றும் அலுவலகத்தை அணுகும் முறை என்பன தொடர்பில் தெளிவாக விளக்கமளிக்க வேண்டிய அவசியம் உள்ளது. காணாமல் போனோர் அலுவலகத்தின் தற்போதைய அமைப்பு ரீதியான திட்டம் மற்றும் கொள்கைகளை மக்களுடன் பகிர்ந்து கொள்வதே இதன் பிரதான நோக்கமாக உள்ளது.

பல ஆண்டுகளாகத் தமது உறவினர்களைப் பிரிந்துள்ள குடும்பத்தினரின் அவசரப்போக்கையும், விரக்தியையும் காணாமல்போனோர் அலுவலகம் புரிந்துகொண்டுள்ளது. எனினும், அத்தியாவசிய நடைமுறைகளை உறுதிப்படுத்துவதற்காகவும், முறையான வெளிப்பாடு ஒன்றை ஏற்படுத்துவதற்கும் இந்த விடயத்தைக் கட்டமைக்கப்பட்ட முறையில் கையாள்வது அவசியமாகும். எனவே, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் பொறுமையுடன் செயற்பட வேண்டும்.

எதிர்வரும் ஜூன் மாதமளவில் இவ்வாறான ஆலோசனை பரிமாற்றச் செயற்பாடுகளை மாத்தறை, திருகோணமலை, முல்லைத்தீவு, கண்டி, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய இடங்களில் தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன." என்றும் அவர் தெரிவித்தார்.(ஆ)

# லிட்டில் ஹார்ட்டுக்கு இராணுவம் நன்கொடை



கொழும்பு, மே 12

இலங்கை இராணுவம் 'லிட்டில் ஹார்ட்' நிதியத்துக்கு 70 மில்லியன் ரூபா நிதியை நன்கொடையாக வழங்கியுள்ளது.

அதனை உத்தியோகபூர்வமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கும் நிகழ்வு, ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சேவையில் உள்ள இராணுவத்தினரின் அரை நாள் சம்பளம் இவ்வாறு 'லிட்டில் ஹார்ட்' நிதியத்துக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இராணுவ மகளிர் படையணியைப் பிரதிநிதித்துவப்படுத்தி கப்டன் பியுமி சேதனா, அதிகாரம் அளிக்கப்பட்ட அதிகாரி சுமித் விஜேசிங்க, இராணுவ சிப்பாய்களை பிரதிநிதித்துவப்படுத்தி ருவன் குமார செபர், மகளிர் இராணுவச்சிப்பாய்களை பிரதிநிதித்துவப்படுத்தி மகளிர் சமிக்ஞை படையணி வீராங்கனை தினக்ஷி ஆகிய உறுப்பினர்களினால் இந்த நிதியத்துக்குரிய காசோலை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதி குறித்த காசோலையை 'லிட்டில் ஹார்ட்' நிதியத்தின் வைத்திய நிபுணர் துமிந்த சமரசிங்க மற்றும் உறுப்பினர் சுமேத ரணசிங்க ஆகியோரிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில், இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க உள்ளிட்ட இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். (ஆ)

# 456 தொண்டர் ஆசிரியர்கள் கிழக்கு மாகாணத்தில் தகுதி

மட்டக்களப்பு, மே 12

கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு நடத்திய நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் 456 தொண்டர் ஆசிரியர்கள் தகுதி பெற்றுள்ளனர் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

"கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் தகுதியான தொண்டர் ஆசிரியர்களின் பெயர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. தேவையானால் இந்தப் பட்டியல் மாற்றியமைக்கப்படலாம். இது தொடர்பான மேன்முறையீடுகளை எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு முன்னராகக் கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளருக்கு முறையீடு செய்யலாம். தோற்றியவர்களில் யாராவது தனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது எனக் கருதினால் மேன்முறை செய்யலாம். இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ள ஆசிரியருக்கு எதிராக முறைப்பாடு இருந்தாலும் மேன்முறையீடு செய்யலாம்.

2007 ஆம் ஆண்டு முதல் 3 வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றிய 50 வயதுக்குக் குறைந்த தொண்டர் ஆசிரியர்களும், சகல ஆவணங்களையும் நேர்முகப்பரீட்சையில் சமர்ப்பித்தவர்களும் தகுதியானவர்களாகத் தெரிவாகி உள்ளனர்." என்று கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேன்முறையீட்டுக்குப் பின்னர் இந்தப்பட்டியல் மத்திய கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டு, பின்னரே நியமனம் வழங்குவது தொடர்பாக அறிவிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)

எதிரொலி
Ethiroli
சனி, 12 மே 2018 ethirolimedia@gmail.com

## இதுதான் உண்மை அஞ்சலி

இந்த நூற்றாண்டின் மறக்கவோ, மன்னிக்கவோ முடியாத தமிழினப் படுகொலையை மீள நினைந்து, கண்ணீர் மல்கி, கசிந்துருகும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்க ஒவ்வொரு தமிழருக்கும் உரிமை உண்டு.

ஆனால் அதனை ஒழுங்கு செய்யும் உரிமை அரசியல்வாதிகளை விட போராடிய போராளிகளுக்கும், மக்களுக்குமே முதன்மையாக உண்டு.

அனைத்து தமிழர்களும் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்று அஞ்சலித்து, "நீதியை நிலை நாட்டும் வரை நாம் ஓயமாட்டோம்!" என ஒவ்வொருவரும் கண்ணீரால் உறுதி எடுத்து வந்தனர்.

உலகில் எங்கு இந்த நிகழ்வு நடைபெற்றாலும் இதுவே உறுதி மொழி!

மாறாக நீ பெரிது நான் பெரிது என மோதிக் கொள்ளும் –போட்டி போடும் –தமிழர்களைப் பிரித்தாளும் யுத்த களம் அல்ல அது!

நாமாக ஒன்றுபட்டு "இலட்சியமும், விடுதலையுமே பெரிது எனப் போற்றி உறுதியோடு போராடுவோம்!" என வலிமையோடு எழுந்து நின்று ஏதேனும் ஒரு வழியில் ஓயாமல் போராட உறுதி எடுக்கும் தளமே அது !

அதற்குத் தயாரானவர்களே உண்மையான போராளிகள். அவர்களே இன்றைய போராட்டத்தை கையில் எடுத்து வரலாற்றை முன்நகர்த்துபவர்கள்!

அதற்காக முன்னாள் போராளிகளை தூக்கி எறிவதாக பொருள் அல்ல! அவர்களின் ஈகம் போற்றுதற்குரியது. அவர்களும் விழிகளுக்கு ஒப்பாக போற்றி பாதுகாக்கப்பட வேண்டும்!

மக்களிடம் இருந்து எதையும் பதிலுக்கு எதிர்பாராமல் தம்மை அர்ப்பணித்து போராடியவர்கள் போராளிகள்.

நாளைய சந்ததி நலமோடு வாழ தன்னை அர்ப்பணித்தவனே மக்களுள் இருந்து எழுச்சி கொண்டு எழுந்து போராடும் போராளி! அவர்கள் எங்கள் காவல் தெய்வங்கள்!

நாட்டுக்காகத் தம்மை இழந்த நிலையிலும் தமது போராட்டத்தின் நீதியைப் போற்றி கொண்டே வாழும் அவர்கள் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்.

அவர்கள் அர்ப்பணிப்புகள் உயர்ந்தவை! எனவே முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை "நாம் தான் நடத்துவோம்" என்று ஆளுக்கொரு பக்கமாக வீம்புடன் நிற்பவர்கள், அதே வேகத்தை தமக்காகப் போராடி, இன்றும் உயிரோடு இருக்கும் முன்னாள் போராளிகளின் வாழ்நிலை உயர உதவி செய்ய ஏன் முன்வருவதில்லை? நினைவுச் சுடரேற்ற அடிபடும் அரசியல்வாதிகளும், பல்கலைக்கழக மாணவர்களும் இருண்டுபோன முன்னாள் போராளிகளின் வாழ்வில் பேரொளியை வீசச் செய்ய முடியாவிட்டாலும், சிறு தீக்குச்சியைக் கூட ஏற்றிவைக்கத் தயாராகவில்லை. ஏனெனில் உயிரோடு இருப்பவர்களைப் பற்றி இவர்கள் எவருக்கும் கவலையில்லை. பிணங்கள் மீதும், பிணங்கள் புதையுண்ட நிலங்களின் மீதுமே தங்கள் ஆதிக்கத்தைக் காட்ட ஆசைப்படுகின்றார்கள். இனியாவது கொஞ்சம் கண் திறவுங்கள். வாழ்வின் ஒவ்வொரு நாளையும் மே–18 போன்று, நெருப்பின் மீது தகிக்கும் வாழ்வோடு போராடும் முன்னாள் போராளிகளையும் ஈடேற்ற கரம் கொடுங்கள். அதுவே நெருப்பெரிந்த நிலத்தில் வீழ்ந்து போனவர்களின் ஆன்மாக்களுக்குச் செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்கும்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# ஒட்டுசுட்டான் விகாரை விவகாரம்
## படைத்தளபதி விசாரணைக்கு அழைப்பு

வவுனியா, மே 12

ஒட்டுசுட்டான் பகுதியிலுள்ள 64 ஆவது படைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரை தொடர்பான விசாரணைகளை மனித உரிமைகள் ஆணைக்குழு வவுனியா அலுவலகம் மேற்கொண்டு வருகின்றது.

இந்நிலையில் குறித்த படைமுகாமின் பொறுப்பதிகாரியையும் இலங்கை இராணுவத் தளபதியையும் எதிர்வரும் 25ஆம் திகதி வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு வருகை தருமாறு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

கற்சிலைமடுப்பகுதியில் புதுக்குடியிருப்பு செல்லும் பிரதான வீதியில் தனியார் காணி ஒன்றில் 64ஆவது




படைப் பிரிவின் இராணுவ முகாம் அமைந்துள்ளது. அதில்பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பௌத்த விகாரை அமைக்கப்படும் காணியினை தனியார் ஒருவர் உரிமை கோரியிருந்தார். இந்நிலையில் அக்காணி தனியார் ஒருவருக்குச் சொந்தமானது என்பதை பிரதேச செயலகம் உறுதிப்படுத்தியுள்ளது. இவ்விடயம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில், தனது காணியை மீட்டுத் தருமாறு காணியின் உரிமையாளர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு மேற்கொண்டிருந்தார்.

இதையடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பொறுப்பதிகாரியும் சட்டத்தரணியுமான ஆர்.எல்.வசந்தராஜா தலைமையில் விசாரணைகள்முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் 25ஆம் திகதி குறித்த படை முகாமின் பொறுப்பதிகாரியையும், இலங்கை இராணுவத் தளபதியையும், காணியின் உரிமையாளரையும் விசாரணைக்கு வருமாறு மனித உரிமைகள் ஆணைக்குழு அழைப்பு விட்டுள்ளது.

## உதயங்க வீரதுங்கவின் மனு தள்ளுபடி

கொழும்பு, மே 12

ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்கவின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு உயர் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

உதயங்க வீரதுங்கவின் வங்கிக் கணக்குகளை முடக்குவதற்கு விடுக்கப்பட்ட உத்தரவை தளர்த்திக் கொள்ளுமாறு கோரி அடிப்படை உரிமை மனுவை உதயங்க வீரதுங்கவின் மாமியார் தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புவனேகா அலுவிஹாரே, சிசிரா டி அஃப்ஷரூ மற்றும் நளின் பெரேரா ஆகிய மூன்று நீதிபதிகள் அடங்கிய குழு இந்த மனுவை தள்ளுபடி செய்தது.

உதயங்க வீரதுங்கவின் வங்கிக் கணக்குகளை முடக்குவதற்கு பொலிஸ் நிதி மோசடி பிரிவினருக்கு நீதிமன்றம் வழங்கியுள்ள அனுமதி சட்டத்துக்கு முரணானது என்றும் இதனால் உதயங்க வீரதுங்கவின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும் அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

## இலஞ்சம் பெற்ற அதிகாரிக்கு 14 ஆண்டு சிறை

கொழும்பு, மே 12

இலஞ்சம் பெற்ற முன்னாள் உள்நாட்டு இறைவரி அதிகாரி ஒருவருக்கு 14 ஆண்டுகால சிறைத்தண்டனை வழங்கி கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2004ஆம் ஆண்டில் 15,000 ரூபா இலஞ்சமாக பெற்றுக்கொண்ட குற்றத்துக்காக அவருக்கு இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

சிறைத் தண்டனைக்கு மேலதிகமாக 9000 ரூபா அபராதமும், 15,000 ரூபா தண்டப் பணமும் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அநுராதபுரம் கிளையில் வரி மதிப்பீட்டாளராக பணியாற்றும் டீ. எம். ஜனக பண்டார என்பவருக்கே இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வரி தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் உதவி வழங்குவதற்காக வர்த்தகர் ஒருவரிடம் 15,000 ரூபா இலஞ்சமாக பெற்றுக் கொண்டதற்காக அவர் குற்றவாளியாக இனம்காணப்பட்டுள்ளார்.

## ஒரு நாள் பணிப்புறக்கணிப்பு

கொழும்பு, மே 12

பல்வேறு காரணங்களை முன்வைத்து பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாக அரச வைத்திய அதிகாரிகளின் சங்கம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி பரந்தளவிலான ஒருநாள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அந்த சங்கம் இதனைத் தெரிவித்தது.

சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்படுவதை எதிர்த்தும், எட்கா உடன்படிக்கையை தன்னிச்சையான முறையில் தொடர்வதை எதிர்த்தும் அவர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட தீர்மானித்துள்ளனர்.

இது சம்பந்தமாக நேற்றுமுன்தினம் கூடிய அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எட்டப்பட்டதாக அந்த சங்கம் தெரிவித்தது.

## மக்களை நசுக்கும் நல்லாட்சி அரசு

கொழும்பு, மே 12

அரசாங்கம் தனது செலவுகளை குறைத்துக் கொண்டு மக்களுக்கு சேவைகளை வழங்காது வரிகளை அதிகரித்து மக்களை நசுக்கும் செயற்பாடுகளையே முன்னெடுத்து வருவதாக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றையதினம் குடியியல் வான் செலவு ( திருத்த ) சட்ட மூல விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நாட்டில்தற்போது எரிபொருட்களின் விலை அதிகரித்துள்ளது. இதற்கு அரசாங்கம், சர்வதேச எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் ரூபாவின் விலை வீழ்ச்சி என்ற காரணிகளை கூறி அதனை சாட்டாக வைத்து வரிகளை குறைக்காது விலையினை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. விலை உயர்வு ஏற்படுகின்றது என்றால் வரிகளை குறைத்து மக்களுக்கு ஏற்றால் போல் வழங்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் ஒரு சிறிய தொகை அதிகரிக்கப்படுவதை ஏற்றுகொள்ள முடியும்.

ஆனால் அரசாங்கம் தனது வரிகளை குறைக்கவும் தனது செலவுகளை குறைக்கவும் தயாராக இல்லை. அத்துடன் அமைச்சரவையில் அமைச்சர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இவற்றை குறைக்கவும் அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாது மக்கள் மீதே வரிச் சுமைகளை திணித்து மக்களை நசுக்குகின்றது.

மேலும் ஜனாதிபதியும் பிரதமரும் அரசியலமைப்புக்கு முரணாகவே செயற்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் இந்த அரசாங்கத்தை நல்லாட்சி அரசாங்கம் எனக் கூற முடியாது என்றார்.

## இலங்கை ரூபா இன்னும் சரிவு

கொழும்பு, மே 12

அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று முன்தினம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வீழ்ச்சியடைந்தது.

இலங்கை மத்திய வங்கியின் நாணய மாற்று விகிதத்தின் அடிப்படையில், நேற்றுமுன்தினம் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை பெறுமதி, 159.26 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இது கடந்த செவ்வாய்க்கிழமை இருந்த நிலையை விட 30 சதம் குறைவாகும்.

இதற்கு முன்னதாக ஏப்ரல் 25ஆம் நாள், அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி, 159.04 ரூபாவாக காணப்பட்டது.

அதற்குப் பின்னர், சற்று வலுவடைந்திருந்த இலங்கை நாணயத்தின் பெறுமதி, தற்போது 159.26 ரூபாவாக சரிந்துள்ளது.

## இன்று நாளும் கோளும்

12.05.2018 சனிக்கிழமை விளம்பி வருடம் சித்திரை மாதம் 29 ஆம் நாள்

துவாதசி மு.ப. 09.16 வரை | உத்தரட்டாதி மு.ப. 11.54 வரை | குளிகை மு.ப. 06.00-07.30

இராகுகாலம் 09.00- 10.30 | சுபநேரம் காலை 07.30 - 08.30 | எமகண்டம் 01.30 - 03.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உயர்வு | சினம் | அன்பு | போட்டி | ஜெயம் | நன்மை | பகை | இன்பம் | தீரம் | பெருமை | மகிழ்ச்சி | எதிர்ப்பு |

# பாக். பிரஜைக்கு மரண தண்டனை

கொழும்பு, மே 12

கடந்த 8 வருடங்களுக்கு முன்னர் 8.25 கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருளை, இலங்கைக்குக் கொண்டுவந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட, பாகிஸ்தான் பிரஜை ரயிட் மொஹமட் எனப்படும் ஜோனுக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிவான் அமல் ரணராஜா நேற்று மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 2010 ஆம் ஆண்டு வெளிநாட்டில் இருந்து உருளைக்கிழங்குகள் போல வடிவமைக்கப்பட்ட பிளாஸ்ரிக் பாத்திரத்தில், ஹெரோயின் போதைபொருளை மறைத்து வைத்துக் கொண்டு வந்த குற்றச்சாட்டில் இவர் கைது செய்யப்பட்டார்.

இதனை அடுத்து, சந்தேக நபருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. நீண்ட நாள் வழக்கு விசாரணையின் பின்னர், அவர் மீதான குற்றம் நிருபிக்கப்பட்டது. இந்த நிலையில் அவருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (ஆ)

# அர்ஜுனுக்கு மறியல் நீடிப்பு



கொழும்பு, மே 12

பர்பசுவல் ட்ரசரிஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அந்த நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோரை இந்த மாதம் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, கொழும்பு கோட்டை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் இருவரும் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

# ஆறு பேர் போனால் அரசியலமைப்பு வராது

கொழும்பு, மே 12

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 6 உறுப்பினர்களை எதிரணியில் அமரச் செய்தால், புதிய அரசியலமைப்பின் வரவுக்கு முழுமையாகத் தடையை ஏற்படுத்த முடியும் என்று தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியத்தின் ஊடகப் பேச்சாளர் வசந்த பண்டார தெரிவித்தார்.

கொழும்பு - ராஜகிரியவில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

"புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான முயற்சி தற்போது சிறிதளவில் ஸ்தம்பித்துள்ளது. இன்னும் 6 பேரை மாத்திரம் எதிரணிக்கு அழைத்தால், அரசியலமைப்புக்கான முயற்சியைத் தடுக்கலாம். அதற்கான முயற்சிகளை எதிரணி உறுப்பினர்கள் மேற்கொள்ள வேண்டிய காலம் கனிந்துள்ளது.

இவ்வாறிருக்க மக்கள் விடுதலை முன்னணியினர், மஹா சங்கத்தினர் மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ஆகியோருடைய கடும் எதிர்ப்புக்கு மத்தியில், அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முற்படுகின்றனர். எவ்வாறிருப்பினும், இந்தத் திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம், முழுமையாக நடைமுறைக்கு வருவதற்கான வாய்ப்பு உருவாக்கப்படும்." என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஆ)

# வறட்சியை சமாளிக்க முன்னாயத்தம்



கிளிநொச்சி, மே 12

வறட்சியுடன் கூடிய காலநிலையைச் சமாளிப்பதற்காகவும், மக்களுக்கு தொடர்ச்சியாக முறையான குடிதண்ணீர விநியோகத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கோடும் பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பொதுக்கிணறுகள் அனைத்தும் புனரமைப்புச் செய்யப்பட உள்ளன.

இதன் அடிப்படையில் புனரமைப்புச் செய்யப்பட வேண்டிய கிணறுகளின் எண்ணிக்கை, எவ்வகையாக புனரமைப்புச் செய்யப்பட வேண்டும் என்பது தொடர்பில் மதிப்பிடுவதற்காக கள ஆய்வுப் பயணம், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைவர் சு.சுரேன் தலைமையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

"பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபைக்குட்பட்ட அந்தந்த கிராமங்களின் பொது அமைப்புக்களைச் சார்ந்தவர்களின் ஆலோசனைகளைப் பெற்று, இனி வருகின்ற காலங்களில் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய வேண்டும். எமது மக்களின் அடிப்படைத் தேவையான தண்ணீரைப் பெற்றுக் கொடுக்க எமது ஆட்சிக் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்." என்று பிரதேச சபையின் தலைவர் சு.சுரேன் தெரிவித்துள்ளார்.

# இயற்கை எரிவாயுவுக்கு அமைச்சரவை அங்கீகாரம்


கொழும்பு, மே 12

மூன்று திரவ இயற்கை எரிவாயு மின்திட்டங்களை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி உள்ளது. இந்தத் திட்டங்கள் சீனா, இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

தேசிய பொருளாதாரச் சபையின் பரிந்துரைக்கமைய, அம்பாந்தோட்டையில் மூன்று இயற்கை எரிவாயு மின்திட்டங்களை அமைக்கப்பதற்குஅனுமதி கோரப்பட்டது.

தலா 400 மெகா வோட் திறன் கொண்ட இரண்டு மின்திட்டங்கள் சீனா, இந்தியா ஆகிய நாடுகளின் உதவியுடனும், 500 மெகா வோட் திறன் கொண்ட மற்றொரு மின் திட்டம் ஜப்பானிய அரசின் உதவியுடனும் நிறுவப்பட உள்ளது. (ஆ)

# நூல் கையளிப்பு



இறுதிப்போரின் அவலத்தைச் சொல்லும் எழுத்தாளர் ஆ. முல்லை திவ்யனின் "முல்லை நிலமும் நந்திக்கடலும்" கவிதைத் தொகுதியை, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனிடம் எழுத்தாளர் ஆ. முல்லை திவ்யன் கையளித்தமையைப் படத்தில் காணலாம். (ஆ–11)

# டெங்கைக் கட்டுப்படுத்த வவுனியாவில் நடவடிக்கை



வவுனியா, மே 12

வவுனியா மாவட்டத்தில் டெங்கு நுளம்புப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனை, மலேரியா தடுப்பு இயக்கம் ஆகியன இணைந்து விசேட வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளன.

வவுனியாவில் அண்மையில் பெய்த மழை காரணமாக டெங்கு நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது. இதனை அடுத்து, டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் முன்னாயத்த நடவடிக்கையாகவே இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை வைத்தியர் எஸ். லவனின் பணிப்புரையின் பேரிலேயே இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.(ஆ)

# ஊடகவியலாளர்கள் பாதுகாக்கப்படுவர்!

கொழும்பு, மே 12

ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பதில் அரசாங்கம் தொடர்ந்தும் கவனம் செலுத்தும். அவர்களுக்கு ஏதாவது பிரச்சினை ஏற்படுமாயின் அது தொடர்பில் அரசாங்கத் தகவல் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தயாராக உள்ளது என்று அந்தத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சுட்டத்தரணி சுதர்ஷன குணவர்தன தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில், பி.பி.சி. செய்தியாளர் அஷாம் அமீன் தொடர்பில் குற்றப்புலனாய்வுத் துறை மேற்கொள்ளவிருந்த விசாரணை தொடர்பாக செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"ஜனாதிபதியின் ருவிட்டர் பக்கத்தில் வெளியாகி இருந்த செய்தியை மீள் பிரசுரம் செய்தமை தொடர்பிலேயே பி.பி.சி. செய்தியாளர் அமீன் குறித்து குற்ற புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தத் திட்டமிட்டிருந்தனர். அது தற்போது விலக்கி கொள்ளப்பட்டுள்ளது. அதனால், இந்தப் பிரச்சினை தற்போது முடிவுக்கு வந்துள்ளது.

ஜனாதிபதியின் ருவிட்டர் பக்கத்தில் குறித்த விடயம் எவ்வாறு வெளியானது என்று விசாரணை நடத்தப்படுகின்றது. ஜனாதிபதியின் ஊடகப்பிரிவும் இதை வெளியிடவில்லை என்று தெரிவித்துள்ளது. இணையத்தள சைபர் பயங்கரவாதத் தாக்குதலே இதற்கு காரணமாக இருக்கலாம்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

# உண்மையைக் கண்டறிக!

## ரிஷாத் வேண்டுகோள்



கொழும்பு, மே 12

வில்பத்துக் காட்டை அழித்து மக்களைச் சட்டவிரோதமாகக் குடியேற்றுவதாக என்மீதும், வடக்கு முஸ்லிம் மக்கள்மீதும் முன்வைக்கப்பட்டுள்ள போலிக் குற்றச்சாட்டுக்களுக்கு முற்றுபுள்ளி வைத்து, உண்மை நிலையைக் கண்டறியுங்கள் என்று என வனஜீவராசிகள் அமைச்சர் சரத் பொன்சேகாவிடம் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

"வில்பத்துவில் ஓரங்குல நிலமேனும் முஸ்லிம்களால் கையகப்படுத்தப்படவில்லை. இது அப்பட்டமான பொய் ஆகும். இது தொடர்பில் உண்மை நிலையை கண்டறிய வேண்டும் என நாம் நீண்டகாலமாகக் கோரிக்கை விடுக்கின்றோம். அமைச்சர் சரத் பொன்சேகா இந்த விவகாரம் தொடர்பில் கவனம் செலுத்துவார் என நம்புகின்றேன். எவராவது வில்பத்துக் காணியை அழித்திருந்தாலோ, அதில் குடியேறி இருந்தாலோ அவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இந்த விடயத்தில் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துபவன் என்ற வகையில், நானும் பூரண ஒத்துழைப்பை வழங்குவேன்." என்றும் அவர் தெரிவித்தார். (ஆ)

## கவனயீர்ப்பு எதிரொலி: மனித உரிமை ஆணைக்குழு வவு. சிறையில் விசாரணை

வவுனியா, மே 12

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலைக் கைதிகளுக்கு சித்திரவதை இழைக்கப்படுவதாக கைதி ஒருவர் நீதிமன்றத்தில் அண்மையில் தெரிவித்த முறைப்பாடு மற்றும் சட்டத்தரணிகளால் மேற்கொள்ளப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டம் ஆகியனவற்றைத் தொடர்ந்து, இந்த விடயம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு நேற்று விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா மாவட்டப் பொறுப்பதிகாரி சட்டத்தரணி ஆர்.எம்.வசந்த ராஜா தலைமையில் சென்ற குழுவினர், வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில்நிலைமைகளை ஆய்வு செய்து, சிறைக் கைதிகளிடம் நீண்ட நேரம் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அண்மையில் விளக்கமறியல் சிறைக்கைதி ஒருவர், நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு அழைத்து வரப்பட்டபோது விளக்கமறியல் சிறைச்சாலையில் இடம்பெறும் கைதிகளுக்கு எதிரான அநீதிகளை நீதிவானின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தார். இதனைத் தொடர்ந்து, நேற்றுமுன்தினம் சட்டத்தரணிகளும், சிறைச்சாலைக்குள் இடம்பெறும் சித்திரவதைகளுக்கு எதிராக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் தொடர்ச்சியாகவே மனித உரிமைகள் ஆணைக்குழுவினரால் இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பொறுப்பதிகாரி, "சிறைச்சாலையில் உள்ள கைதிகள், சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் சிறைக்காவலர்கள் ஆகியோரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. பெற்றுக்கொள்ளப்பட்ட முறைப்பாடுகள் கொழும்பு தலைமை அலுவலகத்துக்கு அறிக்கையிடப்படும்." எனத் தெரிவித்தார். (ஆ)

## நாடகக் கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மே 12

திருமறைக் கலாமன்றத்தால் நடத்தப்படும் நாடக அரங்கியலுக்கான சான்றிதழ் கற்கை நெறியில், 2018 ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நாடகக் கலையின் மேம்பாடு கருதி திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகம் கடந்த 26 வருடங்களாக, இந்தக் கற்கை நெறியை நடத்தி வருகின்றது.

இதில், நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களும், நாடகமும் அரங்கியலும் பாடத்தைத் தரம் 11,12,13 இல் பயிலும் ஆர்வமுள்ள மாணவர்களும் இணைந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு மாதங்களைக் கொண்ட இந்தப் பயிற்சி நெறிக்கான வகுப்புக்கள் சனி,ஞாயிறு தினங்களில் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 05.30 மணி வரை நடைபெறுவுள்ளன. அத்துடன் போயா தினங்களில் முழு நாள் நாடகப் பட்டறையாகவும் நடைபெறும்.

இந்தப் பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை திருமறைக் கலாமன்றத்தின் அலுவலகத்தில் பெற்றுப் பூரணப்படுத்தி, எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாக ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இதில், நாடக எழுத்துருவாக்கம், நடிப்பு, நெறியாள்கை, அரங்கத் துணைக் கலைகள் (வேட உடை, ஒப்பனை, காட்சி விதானிப்பு, இசை, ஒளி விதானிப்பு ) நாடகத் தயாரிப்பு, கூத்துப் பயிற்சிகள் போன்றவை பிரதான அம்சங்களாக இடம்பெறும். (ஆ)

## திருமலையில் சூடு: ஒருவர் உயிரிழப்பு

திருகோணமலை, மே 12

திருகோணமலை, சிறிமாபுர பகுதியில் இரு குழுக்களுக்களுக்கு இடையே இடம்பெற்ற துப்பாக்கி சூட்டில் ஒருவர் உயிரிழந்துள்ளர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது. தெல் குமார என்று அழைக்கப்படும் ஹெந்தவிதானகே செல்லின் குமார என்ற 45 வயதான நபரே துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருகோணமலை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஆ)

## பாடசாலை சேவைக்கும் கட்டணம் அதிகரிப்பு?



கொழும்பு, மே 12

எரிபொருளுக்கான விலை அதிகரிக்கப்பட்டமையை அடுத்து, பாடசாலை சேவைகளில் ஈடுபடும் வாகனங்களுக்கான கட்டணங்களை அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று பாடசாலை சேவைகளில் ஈடுபடும் வாகனச் சாரதிகள் அறிவித்துள்ளனர்.

எனினும், இந்தக் கட்டண அதிகரிப்பு தொடர்பில், இதுவரை எவ்விதத் தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அது தொடர்பிலான கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருவதாகவும் பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகன சாரதிகள் தேசிய சங்கத்தின் தலைவர் மல்ஸ்ரீ த சில்வா தெரிவித்துள்ளார்.(ஆ)

## பொறியியலாளர் மீது நேற்றுத் தாக்குதல்!



பொலனறுவை, மே 12

கடமையின் பொருட்டுச் சென்றிருந்த பராக்கிரம சமுத்திர நீர்ப்பாசனப் பொறியியலாளர் அசேல உதயங்க மீது, பொலனறுவை தெகே ஹெல பகுதியில் வைத்து சிலர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் காயமடைந்த நீர்ப்பாசனப் பொறியியலாளர் பொலனறுவை வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வருகிறார்.

பொலனறுவை தெகே ஹெல பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள சட்ட விரோதக் கட்டடங்களை அகற்றுமாறு கோரி, பொறியியலாளர் உட்பட அதிகாரிகள் சிலர் அங்கு சென்றிருந்த போதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதலுடன் தொடர்புடைய நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகப் பொலனறுவை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஆ)



## அந்த கட் அவுட் கதாநாயகன் ஆர்?

இந்தியாவிலை சினிமா அரசியலாப்போச்சுது. இலங்கையிலை அரசியல் சினிமாவாப் போச்சுது. அதுவும் வட மாகாணத்திலை. அதுவும் யாழ்ப்பாணத்திலை. அதுவும் யாழ்ப்பாண மாநகர சபை எல்லேக்கை. ஏன் உந்தக் கூத்தாடித்தனம். எனக்கெண்டால் விளங்கேல்லை. ஆனால் முதலி சொல்லுறான் உது அவர் கண்ட கனவு அண்ணை. அதைத்தான் செய்து பாக்கிறார். வேறை ஆரைப் பற்றிக் கதைக்கிறன் எண்டு நினைக்கிறியள். உவர்தான் மேயரைப் பற்றித்தான்.

இண்டைக்கு சின்னத்துரை பெரியகடைப் பக்கம் போனவராம். அந்தச் சத்திரமிருந்த கிணத்தடியிலை சீமான்ரை கட் அவுட்டை, சினிமாக்காரருக்கு வைச்சமாதிரி பெரிசாச் செய்து கட்டிக்கிடக்காம்.. ஆனால் நல்ல காலம் விஜய், அஜித்துக்கு வாத்த மாதிரி அவற்றை எடுபிடியள் அந்தக் கட் அவுட்டுக்கு மாலை போட்டுப் பால் அபிஷேகம் செய்யேல்லையாம். உப்பிடியே விட்டால் அதையும் வாத்து அவருக்கு சங்கை ஊதிச் சமாதியும் வைப்பினம் போலை கிடக்கு. ஏனெண்டால் உவைக்குப் பின்னாலை நிக்கிற கூட்டத்துக்கு ஏன் சமாதி வைக்கிறதெண்டு தெரியாது. படிச்ச நாகரீகம் தெரிஞ்ச சனம் உப்பிடிச் செய்யாது. உது எங்கையோ கிடந்த வாலுகள்தான் உதைச் செய்து கட்சிக்கு அவப்பேரை உண்டாக்கிறது. உதைப்பாத்தாப் பிறகு நான் கூட்டமைப்பின்ரை ஆள் எண்டு சொல்ல வெக்கமாக் கிடக்கு.

அதிலை நிண்ட சனம் சொல்லிச்சுது. பெரிய கடையடியிலை வைச்ச மாதிரிச் சின்னக்கடையடியிலையும் வைச்சுக் கிடக்காம். ஆனால் உந்தக் கட் அவுட்டைப் பொதுசனம் வைக்கேல்லையாம். அவரேதான் தன்ரை காசிலை வைச்சிருக்கிறதாத்தான் சனம் கதைக்கிது. சொல்லப்போனால். உது ஒரு பப்ளிசிட்டிதானே? முந்தித் தென் இந்தியாவிலை இருந்து வந்த படத்திலை காட்டுவினம் மேடையிலை பேச ஏறி நிண்டு கொண்டு தானே ஆக்களை ஒழுங்குபடுத்தித் தனக்கு மாலை போடுறதைப்போலை உவரும் ஒரு விளையாட்டைக் காட்டி இருக்கிறராம். ஏனெண்டால் உண்மையா பொது சனந்தான் உந்தக் கட் அவுட்டை வைச்சது எண்டால் அவை தங்கடை பேரை இல்லாட்டித் தங்கடை அமைப்பின்ரை பேரைக் கீழை அச்சடிச்சிருப்பினம் எல்லே? ஆனால் அதிலை ஒண்டும் இல்லை. வெறும் யாழ்.மக்கள் எண்டு எழுதிக்கிடக்கு உதென்ன பேக்காட்டு. அப்ப உவையின்ரை அரசியல் விளங்கிதோ?

உப்பிடி எல்லாத்தையும் செய்து சனத்தைப் பேக்காட்டலாம் எண்டதுதான் அவையின்ரை விளக்கம். அதிலை நிண்ட ஒண்டு சொல்லுது. பாருங்கோ அவையின்ரை ஆக்களுக்கை இருக்கிற ஒற்றுமையை. உங்கை மற்ற சபையளிலை எல்லாம் எத்தினை ஆக்கள் வெண்டிருக்கினம். அவைக்கு ஆரேன் கட்அவுட் வைச்சவையோ எண்டு பாருங்கோ– எண்டு தங்களுக்கை கதைக்கினம். உடனை நான் எனக்குள்ளை நினைச்சன் "மூதேவி ஏன் உதை ஒரு நல்ல விசியமாக் கதைக்கிறாய்? உப்பிடி வைக்கிறது வடிவில்லை. அது நாகரீகம் இல்லை. விசியந்தெரிஞ்சவன் எண்டால் உப்பிடி எல்லாம் வைக்கவிடான்கள். அவரும் ஒரு சீப்பான ஆள் போலைதான் கிடக்கு" எண்டு.

அடுத்த எலக்சனிலை எம் பியா வாறதுக்கு உது ஒரு உத்தி எண்டதுதான் அவற்றை விளக்கம்போலை. உப்பிடி எத்தினை விளையாட்டைக் காட்டப் போகினம் பாருங்கோவன். சபைக் கூட்டத்திலை "எழும்பி நிண்டு பேசுங்கோ" எண்டு உவர் வகுப்பெடுக்க. "எனக்குக் கால் வாதம் அதுதான் நிக்கேலாமல் கிடக்கு" எண்டு அவ சொல்ல. "அப்ப மெடிக்கலைக் காட்டன்" எண்டு உவர் கேக்க. "கொண்டு வர மறந்துபோனன். அடுத்தரம் வரேக்கை காட்டுறன்" எண்டு அவ சொல்ல ஒரே கூத்துத்தான். அதுக்கை ஒராள் தனக்குத் தந்த சாப்பாட்டிலை கோழிக்கால் வைக்கேல்லை. தன்னை ஒரு சபை உறுப்பினராக்கூட மதிக்கேல்லை எண்டு சொல்லிச் சன்னதம் கொண்டு ஆட "சரி சரி அடுத்த முறை உனக்கு இரண்டு கால் வைக்கலாம்" எண்டு குழந்தையளுக்குச் சொல்லுறமாதிரிச் சொல்லிச் சமாளிச்சவையாம். எப்பிடி இருக்கு முனுசிப்பல் விளையாட்டு. கேம் எண்டால் கேம் தான். அதுக்காக நீங்கள் என்னோடை கேமைக் கேளாதையுங்கோ. என்ன?

- வில்லங்கம் விநாசி

# தொடர்ச்சிகள்

## தமிழர்களே... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உங்களுக்கும் உள்ளது. அதனைத் தவறவிடாது நாட்டின் வளர்ச்சிக்காக தமிழ் இளைஞர்கள் இராணுவத்தில் இணைய வேண்டும்"

இவ்வாறு இராணுவத்தின் யாழ்ப்பாண மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி அழைப்பு விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் சிங்கள டிப்ளோமா கற்கைநெறியை நிறைவு செய்த 600 மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று முற்பகல் இலங்கை வேந்தன் கல்லூரியில் இடம்பெற்றது.

அதில் பங்கேற்று உரையாற்றும் போதே யாழ்ப்பாண மாவட்டக் கட்டளைத் தளபதி மேற்கண்ட அழைப்பை விடுத்தார்.

வடக்கு மக்கள் மிகவும் புத்திசாலிகள், நல்லவர்கள். எனினும் கடந்த 30 ஆண்டுகள் நீடித்த போர், வடக்கு மக்களையும் தெற்கு மக்களையும் சற்று பிரித்துவிட்டது.

தெற்கு சிங்கள மக்கள் வடக்கு தமிழ் மக்கள் மீது நல்லபிப்பிராயம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். 30 வருடங்களுக்கு முற்பட்ட காலத்தில் வடக்கில் மின்சாரம் இல்லாத நிலையில் கூட வடக்கிலிருந்து சிறந்த மருத்துவர்கள் பொறியியலாளர்கள் உருவாகியிருந்தார்கள்.

எனவே தற்கால இளையோருக்கும் நான் ஒன்றை கூற வருகிறேன். இராணுவத்தை சிங்கள இராணுவம் என எண்ணாதீர்கள். இராணுவ வேலையும் ஒரு அரச வேலைதான்.

எனவே வடக்கு இளைஞர்களும் இராணுவத்தில் இணைந்து இந்த நாட்டின் வளர்ச்சிக்கு சேவையாற்ற முன்வருமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

## மகிந்தவின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுகிறது.

இந்த அரசியல்வாதி இரண்டு வாரங்களுக்கு முன்னர் இலங்கையில் உள்ள பிரபலமான பெண் சோதிடரிடம் இது பற்றி விசாரித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கு பதிலளித்த அந்த பெண் சோதிடர், இந்த கேள்விக்கு இன்னும் 16 ஆண்டுகளுக்கு பின்னரே பதிலளிக்க முடியும் எனவும், முன்னாள் ஜனாதிபதிக்கு இடை நடுவில் எந்த ஆபத்தும் ஏற்படக்கூடிய கிரக தோஷங்கள் எதுவும் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை சோதிடரிடம் மகிந்தவின் ஜாதகம் பற்றி விசாரித்த அரசியல்வாதியின் ஜாதகத்தை ஆராய்ந்த சோதிடர், குறுகிய காலத்தில் ஊசி மருந்தை போட்டுக் கொள்ளும் அளவில் நோய் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் இதனால் கூடிய சீக்கிரம் தேவையான பரிகாரங்களை செய்யுமாறும் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து குறித்த பிரபல அரசியல்வாதி ஏனைய வேலைகளை ஒதுக்கி விட்டு தனக்கு ஏற்பட போகும் நோயை தடுக்க பரிகாரங்களை செய்ய ஆரம்பித்துள்ளதாக தெரியவருகிறது.

## ஈரான்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகபூர்வ அழைப்பின் பேரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஈரான் செல்லவுள்ளார்.

இலங்கையுடனான பொருளாதார, வர்த்தக தொடர்புகளைப் பலப்படுத்துவது மற்றும் ஈரான் முதலீடுகளை இலங்கையில் அதிகரிப்பது என்பன குறித்து ஜனாதிபதியின் விஜயத்தின் போது கவனம் செலுத்தப்படவுள்ளது.

ஈரான் ஜனாதிபதிக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான சந்திப்பு நாளையதினம் இடம்பெறவுள்ளதாகவும், இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## யாழ்.பல்கலை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகமான மக்கள் கொல்லப்பட்டார்கள்.

இறுதி யுத்தத்தில் 40 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நாவின் ஓர் அறிக்கையும் 70 ஆயிரம் மக்கள் கொல்லப்பட்டதாக மற்றுமொரு அறிக்கையும் கூறுகின்றன.

2010ஆம் ஆண்டு முதல் புலம்பெயர் தேசங்களில் ஆங்காங்கேயும் தொப்புள்கொடி உறவாக காணப்படும் தமிழகத்திலும் தமிழர் தாயகத்தில் சில பகுதிகளிலும் முள்ளிவாய்க்கால் கொடூரம் நினைவு கூரப்பட்டது.

2014ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி தமிழ் இன அழிப்பு வாரம் என அனுஷ்டித்தபோது படைத் தரப்பினர் பல்வேறு தடைகளை ஏற்படுத்தினர்.

அந்தஅடிப்படையில் 2015ஆம் ஆண்டு பல அமைப்புக்கள் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு முன்வந்தன.

இந்த நினைவேந்தல் நிகழ்வுகளை பல இடங்களில் பலர் செய்யாமல் தமிழ் இனத்திற்கான தேசிய துக்கதினமாக ஒரே இடத்தில் கட்சி பேதங்களை மறந்து அஞ்சலி செலுத்துவதன் ஊடாகவே சிங்கள பேரினவாதிகளுக்கும் சர்வதேசத்துக்கும் ஒரு செய்தியை சொல்ல முடியும்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளில் கட்சித் தலைவர்களோ மக்கள் பிரதிநிதிகளோ முன்னிலையாக வேண்டிய அவசியம் இல்லை.

துரதிர்ஷ்டவசமாக யாழ்.பல்கலைகழக மாணவர் ஒன்றியம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை ஏற்பாடு செய்வது தொடர்பில் நடத்தப்பட்ட கூட்டங்களுக்கு அழைப்புவிடுத்த போதிலும் அவர்கள் அதில் பங்கு கொள்ளவில்லை.

கத்தோலிக்க அருட்தந்தையர்கள், சட்டபீட பீடாதிபதி குருபரன் ஆகியோருடன் சென்று மாணவர் ஒன்றிய உறுப்பினர்களுடன் பேசுவதற்கு எண்ணியிருப்பதாகவும் எம்.கே.சிவாஜிலிங்கம் சுட்டிக்காட்டினார்.

## அனுமதி மறுப்பு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றியத்தினர் நடத்தியிருத்தனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைமையில் பேரழுச்சியுடன் நடத்துவது தொடர்பில் கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் என பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்திருந்த்து.

இதில் பல்கலைக்கழக அனைத்துப்பீடங்களின் மாணவர் பிரதிநிதிகள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், தொழில்நுட்ப கல்லூரிகளின் மாணவ பிரதிநிதிகள் மற்றும் கோப்பாய், பலாலி ஆசிரியர் கலாசாலை மாணவ பிரதிநிதிகள், கூட்டுறவு சங்கங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பல தரப்பினருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்த்து.

ஆயினும் இக் கலந்துரையாடலை யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் நடத்த நிர்வாகம் நேற்று மறுப்பு தெரிவித்திருந்தது. இதனையடுத்து தனியார் விடுதியில் மேற்படி கலந்துரையாடல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை மேற்படி கலந்துரையாடலை நடத்துவது தொடர்பில் மாணவர்கள் போதிய தகவல்களை உரிய முறையில் நிர்வாகத்துக்கு தெரியப்படுத்தாத காரணத்தினாலேயே நிர்வாகம் அனுமதி கொடுக்க மறுத்ததாக பல்கலைக்கழகப் பதிவாளர் வி.காண்டீபன் தெரிவித்துள்ளார்.

## அதிகரிக்காது... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஸ் கட்டணங்களை எவ்வாறு மறுசீரமைப்பது என்பது பற்றி ஆராயப்படவுள்ளது. இது தொடர்பாக ஆராய்வதற்கு புத்திஜீவிகள் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழு எதிர்வரும் திங்கட்கிழமை கூடி ஆராயும் என்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கட்டணங்களை மாற்றும் தீர்மானத்தை மேற்கொள்கின்ற அதிகாரம் இந்தக் குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த விசேட குழுவில் மொரட்டுவை பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், வரவு செலவுத்திட்ட திணைக்கள அதிகாரிகள், தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் நுகர்வோர் அதிகாரசபை உத்தியோகத்தர்களும் உள்ளடங்குகின்றனர்.

## போர்க்குற்ற... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவு இல்லாததன் காரணமாக தனக்கு எதிராக முன்வைக்கப்படும் பாரிய குற்றச்சாட்டுகளை எதிர்கொள்வதற்கான கட்டமைப்பொன்று அவசியம் என இராணுவம் கருதுகின்றது.

இராணுவத்துக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளை உரிய தகவல்கள் புள்ளிவிபரங்களுடன் எதிர்கொள்ளவேண்டும் .

இதனை கருத்தில் கொண்டு வெளிநாட்டு நடவடிக்கைகள் இயக்குநகரம் ஒன்றை ஏற்கனவே ஏப்ரலில் இராணுவம் ஏற்படுத்தியுள்ளது.

ஐக்கியநாடுகள் அமைதிப்படையில் இடம்பெற விரும்பும் இலங்கை இராணுவத்தினரின் மனித உரிமை செயற்பாடுகள் குறித்து ஆராய்வது அடுத்த சவாலான நடவடிக்கை.

வெளிநாட்டில் உள்ளவர்கள் குற்றம்சாட்டுவது போன்று இராணுவம் வேண்டுமென்றே மனித உரிமை மீறல்களில் ஈடுபடவில்லை என்றால் விசாரணைகள் குறித்து அச்சப்படத் தேவையில்லை. யுத்தத்தின் போது சட்டங்களை மீறிய சம்பவங்கள் அதிகளவுக்கு இடம்பெறவில்லை.

சில படையினர் குற்றங்களில் ஈடுபட்டிருக்கலாம். இதற்காக முழு இராணுவத்தினரையும் குற்றம்சாட்ட முடியாது. இவ்வாறான குற்றங்களில் ஈடுபட்ட 14 பேர் ஏற்கனவே தண்டிக்கப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## இளஞ்செழியனுக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சசிமகேந்திரன், அன்னலிங்கம் பிரேம்சங்கர் ஆகியோருக்கு நீதிச்சேவைகள் ஆணைக்குழுவால் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அவர்களின் இடமாற்றம் வரும் மே 26ஆம் திகதி நடைமுறைக்கு வரும் என பிரதம நீதியரசரால் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

வருடாந்த இடமாற்றத்தின் கீழ் மூன்று ஆண்டுகள் ஒரே மாகாண மேல் நீதிமன்ற அமர்வில் கடமையாற்றியதன் அடிப்படையில் நாடு முழுவதும் மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கு இடமாற்றம் வழங்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதியாக மாற்றம் பெற்றுள்ளார்.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக மாற்றம் பெற்றுள்ளார்.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன், கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதியாக மாற்றம் பெற்றுள்ளார்.

மேல் நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெற்ற திருமதி சிறிநிதி நந்தசேகரன், கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்படுகிறார். அத்துடன் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக என்.எம்.எம் அப்துல்லா நியமிக்கப்படுகிறார்.

சட்டமா அதிபர் திணைக்கள மூத்த அரச சட்டவாதி டெனிஸ் சாந்தன் சூசைதாஸன், கல்முனை மற்றும் மட்டக்களப்பு குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றங்களின் நீதிபதியாக நிய்மிக்கப்படுகிறார். அவருடன் இணைந்து கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி சிறிநிதி நந்தசேகரனும் கடமையாற்றுவார்.

இதேவேளை மேல் நீதிமன்ற நீதிபதிகளாக நியமனம் பெற்ற 13 பேர் பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் முன்னிலையில் நேற்றைய தினம் காலை உறுதியுரையெடுத்து பதவியேற்றனர்.

## முள்ளிவாய்க்கால்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுப்பது தொடர்பான மக்களது உணர்வுகளுக்கு மதிப்பளித்து அதனை கூட்டாக முன்னெடுப்பது தொடர்பில் முதலமைச்சருடன் சந்திப்பொன்றை நடத்த விரும்புவதாக அவர்கள் அறிவித்திருந்தனர். அத்துடன் இதற்கான நேரமொன்றை ஒதுக்கித்தருமாறு அவர்கள் பகிரங்கமாக ஊடககங்களின் ஊடாக கோரிக்கையொன்றினையும் முன் வைத்திருந்தனர்.

அவர்களது கோரிக்கையினை ஏற்றுக்கொண்டு இன்று சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு அவர்களை சந்திக்க முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முன்வந்துள்ளார்.

இச்சந்திப்பில் மதத்தலைவர்களும் பங்கெடுக்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## மன்னிப்பு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரினார் என்பதை, அமைச்சரவைப் பேச்சாளரான ராஜித சேனாரத்ன உறுதிப்படுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இதுபற்றி எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர்,

"ஜனாதிபதிக்கு எதிராக அண்மையில் வெளியிட்ட கருத்துக்கு, அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பின்னர், சரத் பொன்சேகா ஜனாதிபதியிடம் வருத்தத்தை தெரிவித்து மன்னிப்புக் கோரினார்" என்று கூறினார்.

பொதுவேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவை நிறுத்தியது தவறு என்று சரத் பொன்சேகா கூறிய கருத்துக்கே மன்னிப்புக் கோரினார் என்றும் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

## மன்னிப்புக்கு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்பாக சரத் பொன்சேகா கடுமையான விமர்சனங்களை வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பின்னர், ஜனாதிபதியைச் சந்தித்த சரத் பொன்சேகா மற்றும் ஐதேக அமைச்சர்கள், அவரிடம் மன்னிப்புக் கோரியதாக செய்திகள் வெளியாகின.

இதுகுறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள சரத் பொன்சேகா,

"அண்மைய அரசியல் விவகாரங்கள் தொடர்பாக பிரதமர் முன்வைத்திருந்த திட்டம் ஒன்று தொடர்பாக, ஜனாதிபதியையும், பிரதமரையும் சந்தித்து கலந்துரையாடியிருந்தேன்.

சந்திப்பின் போது, பிரச்சினைக்குரிய விவகாரங்கள் குறித்து ஊடகங்களிலும், பொதுக்கூட்டங்களிலும் வெளிப்படுத்துவதை விட, தம்முடன் கலந்துரையாட முடியும் என்று ஜனாதிபதி கூறினார்.

அதற்கு அப்பால், இதுபற்றி எந்தக் கலந்துரையாடல்களும் நடத்தப்படவில்லை. மன்னிப்பும் கோரப்படவில்லை" என்று குறிப்பிட்டுள்ளார்.

## அதிகரிக்கும்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டணமான 10 ரூபாய் கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக, சங்கத்தின் தலைவர், கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரமளவில் பஸ் கட்டணம் அதிகரிக்கப்படும் எனவும் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் தெரிவித்துள்ளார்.

# இடமும் நாளும் குறித்தாச்சு!



வொஷிங்டன், மே 12

எதிர்வரும் ஜூன் மாதம் 12 ஆம் திகதி சிங்கப்பூரில் வைத்து, கிம் ஜோங் உன்னைச் சந்திக்க உள்ளேன். உலக அமைதிக்காக நாங்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சியின் சிறப்பு மிக்கத் தருணம் இது என்று ட்ரம்ப் தனது ருவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

எதிரும் புதிருமாக இருந்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் ஆகியோர் அடுத்த மாதம் 12 ஆம் திகதி சிங்கப்பூரில் சந்தித்துப் பேச உள்ளனர்.

அடுத்தடுத்து ஏவுகணைச்சோதனைகள், அணு ஆயுதப் பரிசோதனை என சர்வதேச நாடுகளை மிரட்டி வந்த வடகொரியத் தலைவர் கிம் ஜோங் உன், தற்போது தனது சேட்டைகளை மூட்டை கட்டி வைத்து மற்ற நாடுகளுடன் இணக்கமான போக்கைக் கடைப்பிடிக்க விரும்புகிறார்.

இதன் முதற் கட்டமாக கடந்த மாதம் தென்கொரிய ஜனாதிபதி மூன் ஜே இன் உடன் கிம் நடத்திய வரலாற்றுச் சிறப்பு மிக்கப் பேச்சுவார்த்தை உலக நாடுகளிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உடன் நடத்த உள்ள பேச்சுவார்த்தை அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)




# உடைந்தது அணை: 47 பேர் உயிரிழப்பு!

நைரோபி, மே 12

கென்யா நாட்டின் தலைநகர் நைரோபியில் இருந்து, வடமேற்கே சுமார் 190 கிலோமீற்றர் தொலைவில் உள்ள சோலாய் நகரில் அமைந்துள்ள படேல் அணை, கடந்த புதன்கிழமை நள்ளிரவு உடைந்தது. இதில், 47 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த அணைக்கட்டின் மதகுகள் உடைந்ததில், அணையில் இருந்த தண்ணீர் வெள்ளமாகப் பாய்ந்தது. இதனால், கரையோரம் இருந்த நூற்றுக்கணக்கான வீடுகள் நீரில் அடித்துச்செல்லப்பட்டன. வீடுகளில் இருந்த மக்களும் நீரில் அடித்துச்செல்லப்பட்டனர். இதில், பலர் காணாமல் போயுள்ளனர். மீட்புப் படையினர் மற்றும் செஞ்சிலுவைச் சங்கத்தினர் ஆகியோர் மீட்புப் பணிகளை மேற்கொண்டுள்ளனர்.

கென்யாவில் கடந்த மார்ச் மாதம் தொடக்கம் கடும் மழை பெய்து வருகின்றது. இதனால், ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கால் இதுவரை 150 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள், முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த அனர்த்தத்தால் சொத்துக்களுக்கும், மனித உயிர்களுக்கும் பேரிழப்பு ஏற்பட்டுள்ளது என அந்த நாட்டு ஆளுநர் லீ கின்யான் ஜுய் தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (ஆ)

# 'ஜெ.' வேடத்தில் கீர்த்தி சுரேஷ்?



சென்னை, மே 12

மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் வாழ்க்கையைப் படமாக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டுள்ளனர். இதில் ஜெயலலிதாவின் வேடத்தில் நடிக்க நடிகை கீர்த்தி சுரேஷை அணுகி இருப்பதாகத் தகவல் கசிந்துள்ளது.

இதற்கான திரைக்கதை, நடிகர்-நடிகைகள் தேர்வு நடக்கிறது. விரைவில் அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மறைந்த நடிகை சாவித்திரி வேடத்தில் கீர்த்தி சுரேஷ் நடித்துள்ள 'நடிகையர் திலகம்' படம் திரைக்கு வந்துள்ளது.

இதில், கீர்த்தி சுரேஷ் சிறப்பாக நடித்திருப்பதாகவும், கதாபாத்திரத்துக்கு கச்சிதமாக அவர் பொருந்தி இருப்பதாகவும் பாராட்டுகள் குவிகின்றன. இதனால்தான் அவரை ஜெயலலிதா வேடத்துக்கு நடிக்க வைக்கப் பரிசீலிப்பதாகக் கூறப்படுகிறது. (ஆ)

# உயிர் துறந்தார் விஞ்ஞானி

ஜெனிவா, மே 12

அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த 104 வயது விஞ்ஞானி டேவிட் குட்ஆல் சட்ட உதவியுடன் தன் உயிரை மாய்த்துக் கொண்டார்.

அவுஸ்ரேலியாவின் பெர்த்தில் உள்ள எடித் கோவன் பல்கலைக்கழக ஆய்வுத்துறையில் பேராசிரியராகப் பணியாற்றி வந்தவர் டேவிட் குட்ஆல். இவருக்கு இந்த முதுமைக் காலத்திலும் கொடிய நோய்கள் எதுவும் இல்லை என்றாலும், அவரது வாழ்க்கைத் தரம் மிகவும் மோசமடைந்து வந்தது.

எனவே, தனது வாழ்க்கையை முடித்துக் கொள்ள விஞ்ஞானி டேவிட் குட்ஆல் விரும்பினார். தனது தற்கொலைக்கு உதவுமாறு அவுஸ்ரேலிய அரசுக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார். ஆனால், ஒருவரின் தற்கொலைக்கு உதவுவது சட்டவிரோதம் என்ற கொள்கையைக் கடைப்பிடித்து வரும் நாடுகளில், அவுஸ்ரேலியாவும் ஒன்று. எனவே டேவிட்டின் கோரிக்கையை அந்த நாடு ஏற்க மறுத்தது.



அதேநேரம், சுவிஸர்லாந்தில், தங்கள் வேலையைத் தாங்களே செய்யும் அளவுக்கு உடல் ரீதியாக திடகாத்திரமாக இருக்கும் ஒருவர், நீண்ட காலமாக தானாகவே இறக்கும் கோரிக்கையைக் கொண்டிருந்தால், அவரது தற்கொலைக்கு உதவுவது சட்டரீதியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

எனவே அவுஸ்ரேலிய அரசின் புறக்கணிப்பால் விரக்தியடைந்த டேவிட் குட்ஆல், சுவிஸ்சர்லாந்துக்குச் சென்றார். அவரது அமைதியான மரணத்துக்கு உதவ முன்வந்த 'எக்சிட் இன்டர்நெஷனல்' நிறுவனம், அவரது பயணத்துக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தது.

அதன்படி சுவிஸசர்லாந்து வந்திறங்கிய அவர், பசல் நகரில் உள்ள மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு நேற்றுமுன்தினம் காலையில் விஷ ஊசி செலுத்தப்பட்டது. அவர் அமைதியாக இறந்தார் என்று எக்சிட் அமைப்பின் நிறுவனர் பிலிப் நிட்ஸ்கி தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னதாக செய்தியாளர்களை சந்தித்த டேவிட் குட்ஆல், எனது வாழ்வை முடித்துக்கொள்ள ஆர்வமாய் உள்ளேன். அவுஸ்ரேலியாவிலேயே இந்த வசதியை ஏற்படுத்தி தந்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். இனிமேலாவது இத்தகைய நடவடிக்கைக்கு அனுமதிப்பது குறித்து அவுஸ்ரேலியாவும், பிற நாடுகளும் பரிசீலிக்க வேண்டும்." என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (ஆ)



# சிவாஜிதேவுடன் திருமணமா?

சென்னை, மே 12

எனக்கும் சிவாஜி தேவுக்கும் நிச்சயதார்த்தம் நடக்கவில்லை. மற்றவர்களைப் பாதிக்கும் தவறான வதந்தியைப் பரப்ப வேண்டாம். நாங்கள் இருவரும் சுப்ரபாதம் தரிசனத்துக்காக திருப்பதிக்குச் சென்றிருந்தோம். எனக்குத் திருமணம் முடிவானால் அதுகுறித்து நானே அறிவிப்பேன் என்று நடிகை சுஜா வருணி தெரிவித்துள்ளார்.

நடிகை சுஜா வருணி 'மாயாவி', 'கஸ்தூரி மான்', 'இந்திரலோகத்தில் நா.அழகப்பன்', 'உளியின் ஓசை' உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார். இவர் பிக்பாஸ் நிகழ்ச்சி மூலம் பிரபலமானார்.

இந்த நிலையில், சுஜா வருணிக்கும், சிவாஜி கணேசனின் பேரனும் ராம்குமாரின் மகனுமான சிவாஜிதேவுக்கும் நிச்சயதார்த்தம் நடந்துவிட்டதாகவும், விரைவில் திருமணம் நடக்க உள்ளதாகவும் அண்மையில் தகவல் வெளியாகியது.

சமீபத்தில் சிவாஜிதேவும், சுஜா வருணியும் திருப்பதி கோவிலுக்கு ஜோடியாகச் சென்று சாமி தரிசனம் செய்தனர். அந்தப் படம் சமூக வலைதளத்தில் பரவியது. இதை வைத்தே இருவருக்கும் நிச்சயதார்த்தம் முடிந்துவிட்டது என்று கிசுகிசுக்கப்பட்டது. (ஆ)

# விடுதலையானோரை வரவேற்ற ட்ரம்ப்



வொஷிங்டன், மே 12

வடகொரியச் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்ட மூன்று அமெரிக்கர்களும் நேற்று தாயகம் வந்தடைந்தனர். அவர்களை ஜனாதிபதி ட்ரம்ப் நேரில் சென்று வரவேற்றுள்ளார்.

அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மைக் பாம்பியோ வடகொரியா சென்று பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதன் தொடர்ச்சியாக, அந்த மூன்று அமெரிக்கர்களும் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் நேற்று அதிகாலை 2 மணியளவில் வொஷிங்டன் நகரில் உள்ள விமானப்படைத் தளத்துக்கு வந்துசேர்ந்தனர். (ஆ)

## முதன் முறையாக

# திருநம்பி - திருநங்கை கேரளாவில் திருமணம்!

திருவனந்தபுரம், மே 12

கேரளாவில் முதன் முறையாகச் சிறப்புத் திருமணத் திட்டத்தின் கீழ் திருநம்பியும் திருநங்கை ஒருவரும் சட்டப்பூர்வத் திருமண பந்தத்தில் இணைந்துள்ளனர்.




திருவனந்தபுரம் வள்ளக்கடவுப் பகுதியைச் சேர்ந்த முகம்மது கபீர், ஷனிபா தம்பதிகளின் மகள் இஷான், திருநங்கையான இஷான் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு சத்திரசிகிச்சை மூலம் மூலம் ஆணாக மாறினார்.

இதுபோல திருவனந்தபுரம் பாட்டூர் பகுதியைச் சேர்ந்த விஜயகுமாரன் உஷா தம்பதியின் மகன் சூர்யா. திருநங்கையான இவர் 2 ஆண்டுகளுக்கு முன்பு அறுவைச் சிகிச்சை செய்து பெண்ணாக மாறியுள்ளார்.

இந்த நிலையில் இவர்கள் இருவருக்கும் இடையே காதல் மலர்ந்தது. அவர்கள் சாதாரண மனிதர்களைபோல திருமண வாழ்க்கையில் நுழைய விரும்பினர். இதுபற்றி பெற்றோரிடம் தெரிவித்தனர். அதன்படி, இவர்களின் திருமணம் நேற்றுமுன் தினம் திருவனந்தபுரத்தில் உள்ள மன்னம் அரங்கில் நடைபெற்றது.

கேரளாவில் இதுபோன்ற திருமணம் முதல் முறையாக நடந்ததால் கேரளச் சுற்றுலாத் துறை மந்திரி கடகம்பள்ளி சுரேந்திரன், திருவனந்தபுரம் மேயர் வி.கே. பிரசாந்த், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீமா உள்ளிட்ட பிரமுகர்களும், தன்னார்வத் தொண்டு நிறுவன பிரதிநிதிகளும் கலந்து கொண்டு வாழ்த்தினர். (ஆ)

# அரையிறுதிப் போட்டியில் சக நாட்டு வீராங்கனையுடன் மோதவுள்ள பிலிஸ்கோவா



மட்ரிட்,மே 12

மட்ரிட் பகிரங்க டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவின் அரையிறுதிக்கு செக்குடியரசு வீராங்கனை கரோலினா பிலிஸ்கோவா தகுதிபெற்றுள்ளார்.

மட்ரிட் பகிரங்க டென்னிஸ் தொடர் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

இந்நிலையில் நேற்று அதிகாலை நடைபெற்ற காலிறுதிப்போட்டியில் பிலிஸ்கோவா, ரோமானிய வீராங்கனை சிமோனா ஹலீப்பை எதிர்கொண்டார்.

இந்தப் போட்டியில் அபாரமாக ஆடிய கரோலினா, 2-0 என்ற நேர் செட் கணக்கில் இலகு வெற்றிபெற்றார்.

முதல் செட்டை 6-4 என கைப்பற்றிய பிலிஸ்கோவா, இரண்டாவது செட்டை 6-3 என கைப்பற்றி அரையிறுதிக்கு முன்னேறினார்.

பிலிஸ்கோவா அரையிறுதிப்போட்டியில் தனது சொந்த நாட்டு வீராங்கனை பெட்ரா கிவிடோவாவை எதிர்கொள்ளவுள்ளார்.

# கிளப் கிரிக்கெட்டில் களமிறங்க ஸ்மித்,வோர்னருக்கு அனுமதி



சிட்னி,மே 12

பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் ஒரு வருடம் தடைவிதிக்கப்பட்ட ஸ்மித், வோர்னருக்கு கிளப் கிரிக்கெட்டில் விளையாட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரின்போது, கேப்டவுனில் நடைபெற்ற 3ஆவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய வீரர்கள் ஸ்டீவன் ஸ்மித், டேவிட் வோர்னர், பான்கிராப்ட் ஆகியோர் பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் சிக்கினார்கள். இதில் ஸ்மித், வோர்னருக்கு ஓராண்டு தடையும், பான்கிராப்ட்டுக்கு 9 மாத தடையும் விதிக்கப்பட்டது.

தடைவிதிக்கப்பட்ட ஸ்மித் குடும்பத்துடன் அமெரிக்கா சென்றிருந்தார். அதன்பின் சமீபத்தில் சொந்த நாடு திரும்பினார். அவருக்கு ஆதரவாக ரசிகர்கள் குரல் கொடுத்து வருகின்றனர். அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபையில் உள்ள முக்கிய நிர்வாகிகளும் ஸ்மித், வோர்னரால் அவுஸ்ரேலிய அணிக்காக விளையாட முடியும் என்று கூறி வருகிறார்கள்.

இந்த நிலையில் கிளப் கிரிக்கெட் போட்டியில் விளையாட ஸ்மித், வோர்னருக்கு அவுஸ்ரேலிய கிரிக்கெட் சபை அனுமதி அளித்துள்ளது.

## வாழ்வா, சாவா போட்டியில்

# ராஜஸ்தான் அசத்தல்






ராஜஸ்தான், மே 12

வாழ்வா, சாவா என்ற நிலையில் களமிறங்கிய ராஜஸ்தான் அணி, பலமிக்க சென்னையை வீழ்த்தி, அடுத்த சுற்றுக்கான வாய்ப்பைத் தக்க வைத்துக் கொண்டது.

நேற்று நடைபெற்ற போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியும் மோதிக்கொண்டன. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் சென்னை அணி துடுப்பெடுத்தாடியது. ஆனால் பெரிதும் எதிர்பார்த்த அம்பதிராயுடு சொதப்பினார். ஆனால் வட்சன் அணியை நிமிர்த்தப் போராடினார். அவருடன் ரெய்னாவும் இணைந்து கொண்டார். முதலில் நிதானம் காட்டிவிட்டு அதிரடிக்குத் திரும்ப வட்சன் முயன்றபோது, தூக்கியடித்து வீழ்ந்தார். டோனி வழக்கம் போல நேற்றும் துடுப்பாட்ட பலத்தைக் காட்டினார். இருப்பினும் சென்னை அணியால் மிகப்பெரிய இலக்கை நிர்ணயிக்கமுடியவில்லை. அம்பதி ராயுடு 12, வட்சன் 39, ரெய்னா 52, பில்லிங்ஸ் 27, டோனி (ஆட்டமிழக்காமல்)33 ஓட்டங்களைக் குவிக்க 20 ஓவர்கள் நிறைவில் சென்னை அணி, 4 விக்கெட் இழப்புக்கு 176 ஓட்டங்களை எடுத்தது. ராஜஸ்தான் அணியின் ஆர்ச்சேர் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பின்னர் களமிறங்கிய ராஜஸ்தான், ஆரம்பம் முதலே சென்னைப் பந்து வீச்சை வெளுத்து வாங்கியது. ஆனால் வழக்கம் போல பென் ஸ்டோக்ஸ் சொற்ப ஓட்டங்களோடு வெளியேறினாலும், மறுமுனையில் பட்லர் ஒரு காட்டுக் காட்டினார். ராஜஸ்தான் அணியின் விக்கெட்டுக்கள் ஒருபக்கத்தால் சரிந்து கொண்டிருந்தாலும், தனி ஒருவனாக பட்லர் சென்னை அணியைப் பந்தாடினார். இதனால் வீழ்த்தவே முடியாத சென்னையைக் கவிழ்த்து , அடுத்த சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இழக்காமல் தக்க வைத்துக் கொண்டது ராஜஸ்தான். ராஜஸ்தான் அணி சார்பில் ஸ்டோக்ஸ் 11, ரஹானே 4, சாம்சன் 21, சோப்ரா 8, பின்னி 22, கௌதம் 13, பட்லர் (ஆட்டமிழக்காது) 93 ஓட்டங்களை எடுத்ததால், ராஜஸ்தான் அணி 6 விக்கெட் இழப்புக்கு 177 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது. ஜோஸ் பட்லர் ஆட்டநாயகனானார். (அ)

# நடால் புதிய சாதனை



மட்ரிட்,மே 12

ஸ்பெயினின் முதற்தர டென்னிஸ் வீரர் ரபேல் நடால் களிமண் ஆடுகளத்தில் தொடர்ந்து 50 செட்களை வென்று புதிய சாதனையொன்றை நிகழ்த்தியுள்ளார்.

அமெரிக்காவைச் சேர்ந்த முன்னாள் டென்னிஸ் வீரர் ஜோன் மெக்கென்ரோ 34 வருடங்களுக்கு முன்னர் படைத்திருந்த சாதனையை நடால் முறியடித்துள்ளார்.

தற்போது 49 வயதாகியுள்ள ஜோன் மெக்கென்ரோ 1984ஆம் ஆண்டு களிமண் ஆடுகளத்தில் மட்ரிட் ஓபன் சம்பியன் உட்பட தொடர்ச்சியாக 49 செட்களில் வெற்றிபெற்று சாதனை படைத்திருந்தார்.

இந்த சாதனையை நேற்றுமுன்தினம் நடைபெற்ற மட்ரிட் ஓபன் மூன்றாவது சுற்றில் நடால் முறியடித்துள்ளார். ஆர்ஜன்டீன வீரர் டியாகோ ஸ்கோவட்ஸ்மனை 6-3 மற்றும் 6-4 என்ற நேர் செட் கணக்கில் வீழ்த்தி காலிறுதிக்கு நடால் முன்னேறியிருந்தார்.

# அஸ்வினால்

## ப்ரீத்தி ஜிந்தா–சேவாக் மோதல்



ராஜஸ்தான்,மே 12

ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கெதிரான ஆட்டத்தில் தோல்வியடைந்ததன் மூலம் சேவாக்கிடம் ப்ரீத்தி ஜிந்தா மோதலில் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது.

ஐபிஎல் 2018 சீசனில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி கேஎல் ராகுல், கிறிஸ் கெய்ல் அதிரடியால் பிளேஒப்ஸ் சுற்றை உறுதிப்படுத்தும் நிலையில் உள்ளது. இதுவரை 10 போட்டிகளில் விளையாடி 6-ல் வெற்றி பெற்றுள்ளது. இன்னும் உள்ள நான்கு போட்டியில் இரண்டில் வெற்றி பெற்றால் முதல் நான்கு இடத்துக்குள் முன்னேறிவிடும்.

கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி தனது 10 ஆவது ஆட்டத்தில் கடந்த 8ஆம் திகதி ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை எதிர்கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் 8 விக்கெட் இழப்புக்கு 158 ஓட்டங்கள் எடுத்தது.

பின்னர் 159 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கிங்ஸ் லெவன் பஞ்சாப் களம் இறங்கியது. தொடக்க வீரர் கிறிஸ் கெய்ல் 1 ஓட்டம் எடுத்த நிலையில் ஸ்டம்பிங் ஆனார். அதன்பின் கருண் நாயர், மனோஜ் திவாரி, நாத் போன்ற முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் இருக்கையில், யாரும் எதிர்பார்க்காத நிலையில் அஸ்வின் களம் இறக்கப்பட்டார். 2 பந்தை மட்டுமே சந்தித்த நிலையில் ஓட்டம் எதுவும் எடுக்காமல் டக்அவுட் ஆனார்.

பந்து வீச்சுக்கு சாதகமான இந்த ஆடுகளத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது. கேஎல் ராகுல் 70 பந்தில் 11*பவுண்டரி, 2 சிக்சருடன் 95 ஓட்டங்கள் எடுத்தும் அணியை வெற்றி பெற வைக்க முடியவில்லை.

அஸ்வினை 3ஆவது இடத்தில் களம் இறக்க ஆலோசகரான சேவாக்தான் காரணம் என்று கூறப்படுகிறது. இதனால் உரிமையாளர்களில் ஒருவரான ப்ரீத்தி ஜிந்தா போட்டி முடிந்த பின்னர் சேவாக் உடன் வார்த்தைப் போரில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. அப்போது, ஆடும் லெவன் அணியில் தலையிட்டு தோல்விக்கு காரணமாக இருந்ததாக ப்ரீத்தி குற்றம்சாட்டியதாக தகவல்கள் கூறுகின்றன. இதனால் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியில் இருந்து சேவாக் வெளியேற வாய்ப்பு உள்ளதாகவும் கூறப்படுகிறது.

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 12.05.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.